மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி

முன்னிலை : திரு இ. செல்வராஜ்., B.C.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2018-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13-ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2049, ஸ்ரீவிளம்பி வருடம் ஆடி மாதம் 28ம்நாள்

-------

**அசல் வழக்கு எண்.146/2012**

சபீதா ...வாதி....

...எதிர்....

1. அஞ்சலை என்கின்ற அஞ்சம்மாள்
2. மணிகண்டன்
3. மார்கோனி
4. ஸ்ரீ சட்டநாதசுவாமி தேவஸ்தானம், சீர்காழி சார்பாக அதன் கண்காணிப்பாளர்.

...பிரதிவாதிகள்....

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 02.08.2018 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்களும், 1முதல் 3-பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். கார்த்திக்ராஜன் அவர்களும் ஆஜராகியும், 4-ம்பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு 3.8.17 அன்று அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை எனது பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவர்களைச் சார்ந்தவர்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்குரைச் சுருக்கம்

4-ம்பிரதிவாதிக்கு சொந்தமான தாவா சொத்தினை வாதியின் தகப்பனார் குத்தகைக்கு ஒப்புக்கொண்டு சாகுபடி செய்துவந்து வாதியின் தகப்பனார் தங்கவேல் பெயரில் குத்தகை உரிமை பதிவேடு ஏற்பட்டுள்ளது. வாதியின் தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள் இருந்து முதல்மனைவி இறந்துவிட்டார். வாதி அவரது தகப்பனாரின் முதல்மனைவிக்கு பிறந்த மகள் ஆவார். 1-ம்பிரதிவாதி

வாதியின் தகப்பனாருக்கு இரண்டாவது மனைவி ஆவார். 2-ம்பிரதிவாதி 1-ம்பிரதிவாதியின் மகன் ஆவார். தாவா சொத்தில் தங்கவேல் என்பவரின் மகள் என்ற முறையிலும், 1-ம்பிரதிவாதி மனைவி என்ற முறையிலும், 2-ம்பிரதிவாதி மகன் என்ற முறையிலும் பாகம் பெற உரிமையுடையவர்கள் ஆவர். தாவா சொத்தில் 1,2 பிரதிவாதிகளுக்கு உள்ள சாகுபடி பாத்தியத்தை வாதிக்கு மாற்றம் செய்து கொடுத்து 02.12.1994 அன்று 1,2 பிரதிவாதிகள் குத்தகை உரிமை மாற்றுப் பத்திரம் எழுதிக் கொடுத்து வாதியிடமிருந்து ரூ.24,000/- பெற்றுக்கொண்டு தாவா சொத்தை வாதியிடம் வசம் ஒப்படைத்துவிட்டார்கள். 1,2 பிரதிவாதிகளிடமிருந்து தாவாசொத்தின் குத்தகை உரிமையைப்பெற்ற வாதி ஏகதேச குத்தகைதாரர் என்ற முறையில் தனது இதர சொத்துக்களுடன் சேர்த்து கடந்த 18 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார். 4-ம்பிரதிவாதியின் கணக்கிலும், டி.சி.பி. பதிவேட்டிலும் வாதியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டு குத்தகை செலுத்திக் கொண்டு அனுபவித்து வருகிறார். தாவா சொத்தில் 1,2 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. தாவா சொத்திற்கான ஆர்.டி.ஆர். பதிவை வாதி கேட்கும்பொழுது மாற்றிக்கொடுக்க 1,2 பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். 3-ம்பிரதிவாதி ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதால் 4-ம்பிரதிவாதிக்கு சொந்தமான நஞ்சை விளைநிலங்களை வீட்டு மனைகளாக்கும் நோக்கத்துடன் தாவா சொத்திற்கு எவ்வித உரிமையும் இல்லாத 1,2 பிரதிவாதிகளுடன் ஏதோ ஒரு ஏற்பாடு செய்துள்ளதாக வாதிக்கு தெரியவந்தது. 1முதல் 3 பிரதிவாதிகள் தாவாச்சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்யும் நோக்கத்துடன் தாவா சொத்தின் குத்தகை உரிமை பதிவேட்டை 3-ம்பிரதிவாதியின் பெயருக்கு மாற்றம் செய்ய முயற்சி செய்து வருவது வாதிக்கு தெரிந்து வாதி 26.05.2012 அன்று 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பி அதனை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் 04.06.2012 அன்று தவறான சங்கதிகளைக் கண்டு பதில் அறிவிப்பு அனுப்பி இருந்தனர். தாவா சொத்தில் சேராத இரண்டு ஏக்கர் நிலத்தை வாதியின் சொந்த பணத்தைக்கொண்டு 07.06.1991 அன்று தனிப்பட்ட முறையில் சீயாளம் முருகன் என்பவரின் மகன் வீரமுத்து என்பவரிடம் கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார். வீரமுத்து என்பவர் அந்த இரண்டு ஏக்கர் நிலத்தின் குத்தகை உரிமையை 1989-ம் ஆண்டில் பெற்று அந்த சொத்திற்கு 11.06.1991 அன்று வாதியின் பெயரில் குத்தகை உரிமை மாற்றம் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கில் சேராத ஒரு ஏக்கர் நிலம் வாதியின் பாகமாக கொடுக்கப்பட்டதாக கூறுவது உண்மையல்ல. தாவா சொத்தை வாதியிடம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு அடமானமாக வைத்து முதல்பிரதிவாதி வாதியிடம் தொகை பெற்றுக்கொண்டதாகவும், பின்னர் தொகையை கொடுத்துவிட்டு தாவா சொத்தை மீட்டுக் கொண்டுவிட்டதாகவும் பிரதிவாதிகள் கூறியுள்ளது

உண்மையல்ல. வாதியிடம் 02.12.1994 அன்று ரூ.24,000/-த்திற்கு 1,2 பிரதிவாதிகள் குத்தகை உரிமையை மாற்றம் செய்து கொடுத்துவிட்டபின்னர் தாவா சொத்தில் 1,2 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. தாவா சொத்தினை 3-ம்பிரதிவாதிக்கு 1,2 பிரதிவாதிகள் குத்தகை உரிமை மாற்றம் செய்து கொடுத்துவிட்டதாக பதில் அறிவிப்பில் கூறியுள்ளது உண்மையில்லை. தாவா சொத்தின் அனுபவத்தில் வாதி இருந்துவரும் நிலையில் 3-ம்பிரதிவாதியின் அனுபவத்தில் தாவா சொத்து இருந்து வருவதாக கூறியுள்ளது உண்மையல்ல. பிரதிவாதிகள் ஆட்கள் துணையுடன் தாவா சொத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய முற்படுவது சட்டவிரோத செயலாகும். தாவா சொத்து 4-ம்பிரதிவாதி திருக்கோயிலுக்கு சொந்தமானதாக உள்ளதால் 4-ம்பிரதிவாதியை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக வாதி சேர்த்துள்ளார். வாதி வழக்கில் கோரியுள்ளவாறு செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும்.

3. <u>1-ம்பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2,3 பிரதிவாதிகளால் தங்களுடையதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரைச் சுருக்கம்</u>

வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளில் இந்த எதிர்வழக்குரையில் வெளிப்படையாக பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத்தவிர மற்ற சங்கதிகளை வாதியே நிரூபணம் செய்ய வேண்டும். தாவா சொத்தின் சர்வே எண், பரப்பளவு, நான்கெல்லைகளை வாதியே நிரூபிக்க வேண்டும். தாவா சொத்தானது சீர்காழி ஸ்ரீ சட்டநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமானது என்பது உண்மை ஆகும். தாவா சொத்து சர்வே எண்ணில் தாவா சொத்துடன் சேர்த்து மூன்று ஏக்கர் நஞ்சை நிலத்தை வாதியின் தகப்பனார் தங்கவேல் என்பவர் குத்தகைக்கு ஒப்புக்கொண்டு சாகுபடி செய்துவந்தார். தாவா சொத்து சர்வே எண்ணில் மூன்று ஏக்கர் நிலத்திற்கு வாதியின் தகப்பனார் பெயரில் ஆர்.டி.ஆர். பதிவு உள்ளது என்பது உண்மை ஆகும். 1-ம்பிரதிவாதியானவர் தங்கவேல் என்பவரின் இரண்டாவது மனைவி என்பதும், 2-ம்பிரதிவாதி தங்கவேல் என்பவரின் மகன் என்பதும் உண்மையாகும். தாவா சொத்தில் வாதி தங்கவேல் என்பவரின் மகள் என்ற முறையில் வாதிக்கு பாகம் உள்ளதாக கூறுவது உண்மையல்ல. 02.12.1994 அன்று தாவா சொத்தின் குத்தகை உரிமையை வாதிக்கு மாற்றம் செய்து 1,2 பிரதிவாதிகள் குத்தகை உரிமை மாற்றுப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளதாக வாதி கூறுவது உண்மையல்ல. வாதி தாக்கல் செய்துள்ள குத்தகை உரிமை மாற்றுப்பத்திரம் வழக்கிற்காக மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் ஆகும். 1,2 பிரதிவாதிகள் தாவா சொத்தைப் பொறுத்து வாதிக்கு எவ்வித ஆவணங்களும் எழுதிக்கொடுக்கவில்லை. தாவா சொத்தைப் பொறுத்து வாதிக்கு 1,2 பிரதிவாதிகள் எழுதிக்கொடுக்காத

குத்தகை உரிமை மாற்றுப்பத்திரப்படி வாதி ஏகதேச குத்தகைதாரா் என்ற முறையில் தாவா சொத்தை அவரது இதர சொத்துக்களுடன் சோ்த்து கடந்த 18 வருடங்களாக அனுபவித்து வருவதாக கூறுவது உண்மையல்ல. தாவா சொத்திற்கு திருக்கோயில் கணக்கிலும் வாதியின் பெயா் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வாதி கூறுவது உண்மையல்ல. தாவா சொத்திற்கு வாதி தனிப்பட்ட குத்தகைதாரா் என்ற முறையில் குத்தகை செலுத்திக்கொண்டு அனுபவித்து வருவதாக வாதி கூறியுள்ளது உண்மையல்ல. தாவா சொத்துக்கள் அருள்மிகு சட்டநாத சுவாமி தேவஸ்தானத்துக்கு சொந்தமானது என்று வாதி கூறியுள்ள நிலையில் திருக்கோயில் தேவஸ்தானத்தை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சோ்க்காததால் வழக்கானது அவசியமான தரப்பினா்களை சோ்க்கத்தவறிய குறைபாட்டுக்கு உள்ளாவதால் தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. அருள்மிகு சட்டநாதசுவாமி தேவஸ்தானத்தை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சோ்த்தால் உண்மைநிலை தெரிந்துவிடும் என்பதால்தான் வாதி ஒரு தரப்பினராக சோ்க்கவில்லை. 3-ம்பிரதிவாதி ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறாா் என்பது உண்மையாகும். தாவா சொத்தை வீட்டு மனைகளாக்கும் எண்ணத்துடன் தாவா சொத்திற்கு உரிமையில்லாத 1,2 பிரதிவாதிகளிடமிருந்து 3-ம்பிரதிவாதி ஏதோ ஏற்பாடு செய்து கொண்டுள்ளதாக வாதிக்கு தெரியவந்ததாக கூறியுள்ளது உண்மையல்ல. வாதி 26.05.2012 அன்று பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்புக்கு பிரதிவாதிகள் 04.06.2012 அன்று பதில் அறிவிப்பு கொடுத்துள்ளனா். வாதியின் தகப்பனாரும், 1-ம்பிரதிவாதியின் கணவருமான தங்கவேல் என்பவருக்கு சரஸ்வதி, 1-ம்பிரதிவாதி ஆகிய இரண்டு மனைவிகள். அவா்களில் முதல் மனைவி சரஸ்வதி என்பவா் இறந்துவிட்டாா். 1-ம்பிரதிவாதிக்கும் தங்கவேலுக்கும் மகனான 2-ம்பிரதிவாதியும், புனிதா என்ற மகளும் உள்ளனா். 1-ம்பிரதிவாதியின் மகளான புனிதா என்பவரை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சோ்க்காத காரணத்தினால் வழக்கானது அவசியமான தரப்பினா்களை சோ்க்கத்தவறிய குறைபாட்டுக்கு உள்ளாகிறது. வாதியின் தகப்பனாா் தங்கவேல் உயிருடன் இருக்கும்பொழுதே தாவா சொத்து சா்வே எண்ணில் உள்ள மூன்று ஏக்கா் நஞ்சை நிலத்தில் ஒரு ஏக்கா் நஞ்சை நிலத்தை தனது சகோதரா் சபாபதியின் மனைவி அஞ்சலை என்பவா் சாகுபடி செய்து வருவதற்கு வாய்மொழியாக கொடுத்துள்ளாா். மீதமுள்ள இரண்டு ஏக்கா் நிலத்தில் ஒரு ஏக்கா் நஞ்சை நிலத்தை வாதியின் தகப்பனாா் வாதிக்கு வாய்மொழியாக பாகமாக கொடுத்துள்ளாா். மீதமுள்ள ஒரு ஏக்கா் நஞ்சை நிலத்தை வாதியின் தகப்பனாா் 1-ம்பிரதிவாதிக்கு வாய்மொழியாக கொடுத்துள்ளாா். வாதியின் தகப்பனாா் இறந்தபின்னா் வாதியின் தகப்பனாரின் சகோதரா் சபாபதி என்பவரின் மனைவி அஞ்சலை என்பவா் தனக்கு கிடைத்த ஒரு ஏக்கா் நிலத்தை தனது குடும்ப சூழ்நிலை காரணமாக வாதியின் கணவா் மற்றும்

வாதியின் மாமனார் வீரமுத்து ஆகியோருடன் ஏதோ ஏற்பாடு செய்துகொண்டு குத்தகை உரிமையை வாதியின் பெயருக்கு மாற்றிக்கொடுத்துள்ளார். 1-ம்பிரதிவாதி தனது மகனான இரண்டாம் பிரதிவாதியை படிக்க வைப்பதற்கும், மகள் புனிதாவிற்கு திருமணம் செய்வதற்கும் பணம் தேவைப்பட்டதால் தாவா சொத்தை வாதியிடம் சமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் அடமானமாக வைத்து தொகை பெற்று இருந்தார். பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அடமானத் தொகையை வாதிக்கு திருப்பி செலுத்திவிட்டு தாவா சொத்தை மீட்டுக்கொண்டார். 1,2 பிரதிவாதிகள் தாவா சொத்தைப்பொறுத்து வாதிக்கு எவ்வித குத்தகை உரிமை மாற்றப்பத்திரமும் எழுதிக் கொடுக்கவில்லை. 1-ம்பிரதிவாதிக்கு பாகமாக கிடைத்த சொத்தில் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. 1,2 பிரதிவாதிகள் 3-ம்பிரதிவாதிக்கு 18.02.2012 அன்று தாவா சொத்தின் குத்தகை உரிமையை மாற்றம் செய்து தாவா சொத்தை 3-ம்பிரதிவாதியின் வசத்தில் விட்டுவிட்டனர். தாவா சொத்திற்கான குத்தகை உரிமை பதிவை 3-ம்பிரதிவாதியின் பெயரில் மாற்றம் செய்துகொண்டு 3-ம்பிரதிவாதி அனுபவித்து வருகிறார். தாவா சொத்தை பிரதிவாதிகள் 10.07.2012 அன்று ஆக்கிரமிக்க முயற்சி செய்ததாக வாதி கூறியுள்ளது உண்மையல்ல. தாவா சொத்திற்கு 3-ம்பிரதிவாதி உண்மையான உரிமையாளராக உள்ளதால் அவருக்கு எதிராக உறுத்துக்கட்டளை வாதி கோரியுள்ளது ஏற்கத்தக்கதல்ல. வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>1-ம்பிரதிவாதி தரப்பு கூடுதல் எதிர்வழக்குரைச் சுருக்கம்</u>

தாவா சொத்து 4-ம்பிரதிவாதி தேவஸ்தானத்துக்கு சொந்தமானது என்பது உண்மையாகும். 4-ம்பிரதிவாதி தேவஸ்தானத்தில் தாவா சொத்திற்கான D.C.B. பதிவேடு வாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது உண்மையல்ல. 4-ம்பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கில் வாதி எவ்வித பரிகாரமும் கோராததால் வழக்கிற்கு 4-ம்பிரதிவாதி தேவையற்ற தரப்பினர் ஆவார். வழக்கானது தேவையற்ற தரப்பினரை சேர்த்த குறைபாட்டினால் தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. தாவா சொத்து வாதியின் வசத்திலும் அனுபவத்திலும் இல்லை.

5. <u>இவ்வழக்கின் வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் மற்றும் கூடுதல் எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டன</u>

<u>எழுவினாக்கள்</u>

1. வாதி இவ்வழக்கில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

2. வாதிக்கு வேறு என்ன பரிகாரம் கிடைக்கக்கூடியது?

<u>கூடுதல் எழுவினாக்கள்</u>

1. இந்த வழக்கானது தேவையற்ற தரப்பினரை சேர்த்த குறைபாட்டுக்கு உள்ளாகியுள்ளதா?

2. தாவாச்சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளதா?

6. இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியிடப்பட்டன. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1. மற்றும் பி.சா.2 சாட்சியம் அளித்துள்ளனர். பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.6 சான்றாவணங்கள் குறியிடப்பட்டன.

7. <u>கூடுதல் எழுவினா-1</u>

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்குக்கோப்பு பரிசீலிக்கப்பட்டது. தாவா சொத்தானது 4-ம்பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து என்றும், தாவா சொத்தின் உரிமையாளரான 4-ம்பிரதிவாதியை ஒரு தரப்பினராக இவ்வழக்கில் சேர்த்துள்ள வாதி 4-ம்பிரதிவாதிக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோராததால் 4-ம்பிரதிவாதி இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்பதால் வழக்கானது தேவையற்ற தரப்பினரை சேர்த்த குறைபாட்டுக்கு உள்ளாகிறது என்று 1முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. தாவா சொத்தானது 4-ம்பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தாக உள்ளதால் 4-ம்பிரதிவாதியை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக வாதி சேர்க்காததால் வழக்கானது அவசியமான தரப்பினர்களை சேர்க்கத்தவறிய குறைபாட்டுக்கு உள்ளாவதாக 1-ம்பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் கூறியிருந்த காரணத்தினால்தான் 4-ம்பிரதிவாதியை வாதி இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்துள்ளதாக வாதிதரப்பில் வாதம் புரியப்பட்டது.

8. இவ்வழக்கில் 1-ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது தாவா சொத்தானது 4-ம்பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தாக உள்ளதால் 4-ம்பிரதிவாதியை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் வழக்கானது அவசியமான தரப்பினர்களை சேர்க்கத் தவறிய குறைபாட்டுக்கு உள்ளாவதாக கூறியுள்ளார் என்பது தெரியவருகிறது. 1-ம்பிரதிவாதியின் எதிர்வழக்குரையை 2,3 பிரதிவாதிகளும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். 4-ம்பிரதிவாதியை ஒரு தரப்பினராக சேர்க்காததால் வழக்கானது அவசியமான தரப்பினர்களை சேர்க்கத் தவறிய குறைபாட்டுக்கு உள்ளாவதாக 1முதல் 3 பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் கூறியபின்னர்தான் 4-ம்பிரதிவாதியை வாதி இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சோத்துள்ளார். 4-ம்பிரதிவாதியை ஒரு தரப்பினராக சேர்த்தபின்னர் வழக்கானது தேவையற்ற தரப்பினரை சேர்த்த குறைபாட்டுக்கு உள்ளாவதாக 1முதல் 3 பிரதிவாதிகள் கட்சி செய்துள்ளது முன்னுக்குப்பின் முரணாக

உள்ளது. 1முதல் 3 பிரதிவாதிகளே 4ம்பிரதிவாதியை ஒரு தரப்பினராக இவ்வழக்கில் சேர்க்காததால் வழக்கானது அவசியமான தரப்பினாக்ளை சேர்க்கத்தவறிய குறைபாட்டுக்கு உள்ளாகிறது என்று கட்சிசெய்துவிட்டு பின்னர் 4-ம்பிரதிவாதி இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்று கட்சி செய்யும் 1முதல் 3 பிரதிவாதிகளின் வாதம் ஏற்கும்படியாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கூடுதல் எழுவினா-1-க்கு தீர்வு காண்கிறது.

9. <u>எழுவினா-1 மற்றும் கூடுதல் எழுவினா-2</u>

தாவா சொத்தானது வாதியின் தகப்பனார் தங்கவேல் என்பவரால் குத்தகைக்கு சாகுபடி செய்து வரப்பட்டு குத்தகை உரிமை பதிவேடானது வாதியின் தகப்பனார் பெயரில் பதிவாகியுள்ளது என்றும், வாதியின் தகப்பனார் இறந்துவிட்டபின், 1,2 பிரதிவாதிகளிடமிருந்து குத்தகை உரிமை மாற்றுப்பத்திரம் மூலம் தாவா சொத்தை வாதி 02.12.1994 அன்று பெற்று அதுமுதல் தனது அனுபவத்தில் வைத்துள்ளதாகவும் வாதி தனது வழக்குரையிலும், சாட்சியத்திலும் கூறியுள்ளார். தாவா சொத்தின் குத்தகை உரிமையை 1,2 பிரதிவாதிகள் வாதிக்கு மாற்றம் செய்து கொடுக்கவில்லை என்றும், தாவா சொத்தின் குத்தகை உரிமையை 1,2 பிரதிவாதிகள் 3-ம்பிரதிவாதிக்கு மாற்றம் செய்து கொடுத்து தாவா சொத்தானது 3-ம்பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் கூறியுள்ளார்கள். தாவா சொத்தின் அனுபவத்தில் வாதி இருந்து வருகிறாரா என்பது குறித்து தீர்வு காண வேண்டியுள்ளது.

10. தாவா சொத்தின் குத்தகை உரிமையை வாதி 02..12.1994 அன்று 1,2 பிரதிவாதிகளிடமிருந்து குத்தகை உரிமை மாற்றுப்பத்திரம்மூலம் பெற்று அதுமுதல் தாவா சொத்தானது வாதியின் அனுபவத்தில் உள்ளதாக கூறியுள்ள வாதி 02.12.1994 அன்று 1,2 பிரதிவாதிகளிடமிருந்து தாவா சொத்தை பெற்றதாக கூறும் குத்தகை உரிமை மாற்றுப்பத்திரத்தை இவ்வழக்கில் வாதி தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தினைப் பொறுத்து 4-ம்பிரதிவாதி திருக்கோயில் கேட்பு, வரவு, பாக்கி பதிவேட்டில் (D.C.B.) வாதியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டு தாவா சொத்திற்கு தனிப்பட்ட குத்தகைதாரர் என்ற முறையில் வாதி இருந்து வருவதாக வழக்குரையில் கூறியுள்ள வாதி 4-ம்பிரதிவாதி திருக்கோயில் கணக்கில் தாவா சொத்திற்குரிய D.C.B. பதிவேடானது வாதியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதற்கு வாதி எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்திற்கு வாதி பகுதித்தொகை செலுத்தியதற்குரிய ரசீதுகள் என்று வா.சா.ஆ.1-யை தாக்கல் செய்துள்ளார். வா.சாஆ.1-ல் உள்ள ரசீதுகளை பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது வாதிக்காக சுப்பிரமணியன், கரிகாலன் ஆகியோர் பணம் செலுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

11. தாவா சொத்திற்கு வாதியே நேரடியாக குத்தகை தொகையை 4-ம்பிரதிவாதி திருக்கோவிலுக்கு செலுத்தியதாக வாதி தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். ஆனால் வா.சா.ஆ.1 ரசீதுகளில் வாதி நேரடியாக குத்தகை தொகை செலுத்தியதாக எந்த ரசீதிலும் குறிப்பிடப்படவில்லை. வாதிக்காக சுப்பிரமணியன், கரிகாலன், சின்னத்தாய் ஆகியோர்கள் பணம் செலுத்தியதாக கையொப்பம் இட்டுள்ளார்கள். தாவா சொத்திற்குரிய குத்தகை தொகையை வாதி நேரடியாக செலுத்தியிருந்தால் வாதியின் கையொப்பம்தான் வா.சா.ஆ.1 ரசீதுகளில் இருக்க வேண்டும். ஆனால் வா.சா.ஆ.1 ரசீதுகளில் வாதியின் கையொப்பம் இல்லை. சுப்பிரமணியன் என்பவர் வாதிக்கு சொந்தமான சொத்தில் வேலைபார்த்து வந்த வேலையாள் என்று வாதியும், வாதியின் மகளான வா.சா.2-ம் சாட்சியத்தில் கூறியுள்ளனர். சுப்பிரமணியன் என்பவர் வேலையாளாக இருந்தார் என்று ஏற்றுக்கொண்டாலும் சின்னத்தாய், கரிகாலன் ஆகியோர் யார் என்பதை வாதி விளக்கவில்லை. மேலும் வா.சா.ஆ.1 ரசீதுகள் தாவா சொத்திற்கு செலுத்திய குத்தகை ரசீதுகளா என்பதை நிரூபணம் செய்யும் வகையில் 4-ம்பிரதிவாதி திருக்கோயிலில் உள்ள அதிகாரிகள் யாரையும் வாதி இவ்வழக்கில் விசாரணை செய்யவில்லை. தாவா சொத்து சர்வே எண்ணில் மேலும் இரண்டு ஏக்கர் நிலமானது வாதியின் குத்தகை அனுபவத்தில் உள்ளதாகவும், அந்த இரண்டு ஏக்கர் சொத்திற்கு வா.சா.ஆ.5-ன்படி வாதியின் பெயருக்கு குத்தகை உரிமை பதிவு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் வாதி கூறியுள்ளநிலையில் வா.சா.ஆ.1 ரசீதுகள் தாவா சொத்திற்கு குத்தகை செலுத்திய ரசீதுகள்தான் என்பதை வாதி நிரூபணம் செய்யவில்லை.

12. தாவா சொத்திற்குரிய குத்தகை உரிமை பதிவேடானது வாதியின் தகப்பனார் பெயரில் உள்ளதாக வாதி தனது வழக்குரையில் கூறியுள்ளநிலையில் தாவா சொத்திற்கு 4-ம்பிரதிவாதி திருக்கோயில் கணக்கில் வாதியின் பெயர் எவ்வாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை நிரூபணம் செய்ய 4-ம்பிரதிவாதி திருக்கோவில் அதிகாரிகளை விசாரணை செய்ய முன்வரவில்லை. 4-ம்பிரதிவாதி இவ்வழக்கில் ஒரு தரப்பினராக உள்ளபோதும் எவ்வித கட்சியும் செய்யாமல் தோன்றாத்தரப்பினராக உள்ளார். இத்தகைய சூழ்நிலையில் தாவா சொத்தானது வாதியின் பெயரில் 4-ம்பிரதிவாதி திருக்கோவில் குத்தகை பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை நிரூபணம் செய்ய வேண்டிய பொறுப்பு வாதிக்குத்தான் உள்ளது. ஆனால் வாதி அதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

13. தாவா சொத்தானது வாதியின் தகப்பனாருக்கு சொந்தமான சொத்தாக உள்ளதால் தாவா சொத்தில் வாதிக்கு 1/3 பாகம் கிடைக்கக்கூடியது என்று வாதி தனது வழக்குரையிலும், சாட்சியத்திலும்,

வழக்குக்கு முன்பு 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வா.சா.ஆ.2 அறிவிப்பிலும் கூறியுள்ளார். தாவா சொத்தானது வாதியின் தகப்பனாருக்கு சாகுபடி உரிமையுடைய சொத்து என்பது பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. வாதியின் தகப்பனாரின் முதல் மனைவிக்கு பிறந்த மகள்தான் வாதி என்றும், 1-ம்பிரதிவாதி வாதியின் தகப்பனாரின் இரண்டாவது மனைவி என்றும், 2-ம்பிரதிவாதி வாதியின் தகப்பனாரின் இரண்டாவது மனைவியான 1-ம்பிரதிவாதிக்கு பிறந்த மகன் என்றும் வாதி கூறியுள்ளார். வாதியின் தகப்பனாரின் இரண்டாவது மனைவியான 1-ம்பிரதிவாதிக்கு புனிதா என்ற மகளும் உள்ளார் என்பதை வாதி தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். தாவா சொத்தில் வாதிக்கு பாகம் கிடைக்கக்கூடியது என்று கூறியுள்ள வாதி இந்த வழக்கை வாதி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி என்ன காரணத்திற்காக தாக்கல் செய்யவில்லை என்பது புரியாத புதிராக உள்ளது.

14. தாவாசொத்தில் வாதிக்கும் 1/3 பாகம் உள்ளது என்று வழக்குரையில் கூறியுள்ள வாதி தாவா சொத்தில் 1,2 பிரதிவாதிகளுக்கு உள்ள குத்தகை உரிமையை 02.12.1994 அன்று ரூ.24,000/-த்திற்கு வாதி 1,2 பிரதிவாதிகளிடம் இருந்து மாற்றிப்பெற வேண்டிய அவசியம் என்ன என்பதை வாதி விளக்கவில்லை. தாவா சொத்தில் வாதிக்கு 1/3 பாகம் உள்ளதாக கூறும் நிலையில் தாவா சொத்தில் 1,2 பிரதிவாதிகளின் 2/3 பாக குத்தகை உரிமையை மட்டுமே வாதி மாற்றிப் பெற்றுள்ளதாக கூறவில்லை. தாவா சொத்து சர்வே எண்ணில் தாவா சொத்தைத் தவிர மேலும் இரண்டு ஏக்கர் நிலம் வாதியின் தகப்பனாரின் பெயரில் குத்தகை உரிமை பதிவு ஏற்பட்டிருந்து அந்த சொத்துக்களின் குத்தகை உரிமையை வீரமுத்து என்பவர் 1-ம்பிரதிவாதி மற்றும் வாதியின் தகப்பனாரின் சகோதரர் சபாபதி என்பவரின் மனைவி அஞ்சலை ஆகியோரிடமிருந்து மாற்றிப் பெற்றுள்ளதாகவும், அந்த சொத்துக்களின் குத்தகை உரிமையை வீரமுத்து என்பவரிடமிருந்து வாதி பெற்றுள்ளதாகவும் வாதி கூறியுள்ளார்.

15. வீரமுத்து என்பவர் ஏதோ மூன்றாம் நபர்போல் வாதி இவ்வழக்கில் கூறியுள்ளார். ஆனால் வீரமுத்து என்பவர் வாதியின் மாமனார் என்று வாதி தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். தாவா சொத்து சர்வே எண்ணில் உள்ள மற்ற இரண்டு ஏக்கர் நிலமும் வாதியின் தகப்பனாருக்கு குத்தகை சாகுபடி உரிமையுடைய சொத்துக்களாக உள்ளநிலையில் அந்த சொத்தில் வாதிக்கும் பாகம் உள்ளதாக கூறவில்லை. தாவா சொத்துடன் மொத்தம் மூன்று ஏக்கர் சொத்தானது வாதியின் தகப்பனாருக்கு குத்தகை சாகுபடி பாத்திய உரிமையுடைய சொத்தாக உள்ளநிலையில் தாவா சொத்தில் மட்டும் பாகம் உள்ளது என்பதுபோல் சில சங்கதிகளை வாதி கூறியுள்ளார். தாவா சொத்தில் வாதிக்கு பாகம் இருக்கும்பட்சத்தில் 1,2 பிரதிவாதிகளுக்கும், 1-ம்பிரதிவாதியின் மகளான புனிதா என்பவருக்கும் பாகம்

கிடைக்கக்கூடியதாகும். தாவா சொத்தானது கூட்டுக்குடும்ப சொத்து என்று வாதி இந்த வழக்கில் கூறியுள்ளாரா அல்லது 1,2 பிரதிவாதிகளுக்கு குத்தகை உரிமை உடைய சொத்தாக இருந்து வாதி தாவா சொத்தின் குத்தகை உரிமையை மாற்றி பெற்றுள்ளாரா என்பதை தெளிவாக கூறாமல் தாவா சொத்தில் வாதிக்கு பாகம் உள்ளது என்பது போலவும், தாவா சொத்தின் குத்தகை உரிமையை 1,2 பிரதிவாதிகளிடமிருந்து மாற்றிப் பெற்றுள்ளதுபோலவும் ஒன்றுக்கொன்று முரண்படும் சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

16. தாவா சொத்தில் வாதிக்கும் பாகம் உள்ளது என்ற சங்கதியின் அடிப்படையில் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கருதினால் 1,2 பிரதிவாதிகளும் தாவா சொத்தில் பாகம் பெறக்கூடிய கூட்டுரிமையாளர்களாக உள்ளதால் 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது. தாவா சொத்தின் குத்தகை உரிமையானது 1,2 பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்ற சங்கதியின் அடிப்படையில் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கருதினால் தாவா சொத்தில்1,2 பிரதிவாதிகளுக்குள்ள குத்தகை உரிமையை 02.12.1994 அன்று குத்தகை உரிமை மாற்றுப்பத்திரம் மூலம் ரூ.24,000/-த்திற்கு வாதி பெற்றுள்ளதாக வழக்குரையில் கூறியுள்ளதற்கு ஆதாரமாக 02.12.1994 தேதியிட்ட குத்தகை உரிமை மாற்றுப்பத்திரத்தை ஒரு ஆவணமாக வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் 1,2 பிரதிவாதிகளுக்கு உள்ள குத்தகை உரிமையை வாதி தனது பெயருக்கு மாற்றிப் பெற்றுள்ளார் என்பதற்கு எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாதநிலையில் வாதியின் கூற்று ஏற்கும்படியாக இல்லை.

17. வா.சா.1 தனது சாட்சியத்தில், "... எனது கணவர் இறந்தபின்னர் சீர்காழிக்கு வந்துவிட்டேன் என்றால் எனது கணவர் 2013-ம் ஆண்டில் பணியில் இருந்து ஓய்வு பெற்றபின்னர் சீர்காழிக்கு வந்துவிட்டோம். 2013-ம் ஆண்டில் எனது கணவர் பணிஓய்வு பெறுவதற்கு முன்னரே நான் சீர்காழிக்கு வந்து வீடு கட்டிக்கொண்டு குடியிருந்து வருகிறேன். எனது குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகிய ஆவணங்கள் நெய்வேலி முகவரியில்தான் உள்ளன என்றால் சரியல்ல. சீர்காழி முகவரிக்கு மாற்றம் செய்துவிட்டேன்..." என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

18. வாதியின் கணவர் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் பணிபுரிந்து வந்து 2013-ம் ஆண்டில் பணி ஓய்வு பெற்றபின்னர்தான் சீர்காழிக்கு வாதி வந்ததாக முதலில் சாட்சியத்தில் கூறியுள்ள வாதி பின்னர் வாதியின் கணவர் ஓய்வு பெறுவதற்கு முன்னரே சீர்காழிக்கு வந்து வீடு கட்டிக்கொண்டு குடியிருந்து வருவதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் வாதி சீர்காழியில் எந்த ஆண்டிலிருந்து வசித்து வருகிறார் என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் தாக்கல் செய்யவில்லை. மேலும் வாதியின்

சாட்சியமானது முரண்பட்ட சாட்சியமாக உள்ளது. ஏனெனில் வாதியின் கணவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றபின் 2013-ம் ஆண்டில் சீர்காழிக்கு வந்துவிட்டதாக முதலில் கூறிவிட்டு பின்னர் வாதியின் கணவர் ஓய்வு பெறுவதற்கு முன்னரே சீர்காழிக்கு வந்து வீடு கட்டிக்கொண்டு குடியிருந்து வருவதாக மாற்றி சாட்சியம் அளித்துள்ளார். வாதியின் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது வாதி 2013-ம் ஆண்டு வரையில் நெய்வேலியில் வசித்து வந்துள்ளார் என்பது தெரியவருகிறது.

19. வா.சா.1 தனது சாட்சியத்தில், "... தாவா சொத்திற்கு அதன் உரிமையாளரான 4-ம்பிரதிவாதிக்கு ஆண்டிற்கு எத்தனை கலம் நெல் குத்தகையாக கொடுத்து வருகிறேன் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 9 மா நிலத்திற்கு 18 கலம் நெல் குத்தகையாக கொடுத்து வருகிறேன். நான் கடந்த இதுநாள்வரையிலும் குத்தகையை நெல்லாக மட்டுமே செலுத்தியுள்ளேனா அல்லது பணமாகவும் செலுத்தியுள்ளேனா என்றால் நெல் மற்றும் பணமாக செலுத்தியுள்ளேன். 1994-ம் ஆண்டு முதல் 2015-ம் ஆண்டு வரையில் குத்தகையை நெல்லாக செலுத்தியுள்ளேன்..." என்றும் சாட்சியம் அளித்துள்ளார். தாவா சொத்திற்கு 1994-ம் ஆண்டிலிருந்து குத்தகை செலுத்தியுள்ளதாக கூறியுள்ள வாதி 2006-ம் ஆண்டில் குத்தகை செலுத்திய இரண்டு ரசீதுகளையும், 2008-ம் ஆண்டில் குத்தகை செலுத்திய ஒரு ரசீதையும், 2009-ம் ஆண்டில் குத்தகை செலுத்திய ஒரு ரசீதையும், 2012-ம் ஆண்டில் குத்தகை செலுத்திய ஒரு ரசீதையும் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார். அந்த ரசீதுகளும் வாதியால் நேரடியாக குத்தகை செலுத்தப்பட்டதற்கு ஏற்பட்ட ரசீதுகளாகத் தெரியவில்லை. 1994-ம் ஆண்டிலிருந்து தாவா சொத்திற்கு குத்தகை செலுத்திய ரசீதுகள் எதையும் வாதி தாக்கல் செய்யவில்லை.

20. வா.சா.1 தனது சாட்சியத்தில், "... தாவா சொத்தானது குமரன் நகர் மனைப்பிரிவுக்கு கிழக்கு, சட்டநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான சுப்பிரமணியன் அனுபவத்தில் உள்ள மனைக்கும் மேற்கு, சட்டநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான எனது அனுபவத்தில் உள்ள நஞ்சைக்கும் தெற்கு, காமராஜர் நகர், கல்யாண சீனிவாசபுரம் நகர் மனைப்பிரிவு லே-அவுட் 40 அடி ரோட்டிற்கு வடக்கு என்ற நான்கெல்லைகளுக்கு உட்பட்டு அமைந்துள்ளது என்றால் சரியல்ல..." என்று கூறியுள்ளார்.

21. வா.சா..2 தனது சாட்சியத்தில், "... தாவா சொத்திற்கு மேற்கில் குமரன்நகர் மனைப்பிரிவு உள்ளது என்றால் ஈசானியத்தெரு அமைந்துள்ளது. தாவா சொத்திற்கு கிழக்கில் சுப்பிரமணியன் என்பவர் சாகுபடி செய்துவரும் சீர்காழி அருள்மிகு சட்டநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான நஞ்சை நிலம் உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்திற்கு வடக்கில் எனது தாயாரின்

பெயரில் குத்தகை சாகுபடி உரிமையுள்ள இரண்டு ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கில் காமராஜர் நகர் மனைப்பிரிவு, கல்யாணி சீனிவாசபுரம் மனைப்பிரிவு மற்றும் 40 அடி ரோடு உள்ளது என்றால் சரிதான்..." என்று கூறியுள்ளார்.

22. பி.வா.சா.1 தனது சாட்சியத்தில், "... தாவா சொத்திற்கு மேற்கில் பாய்ச்சல் கண்ணி இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு மேற்கில் மனைப்பிரிவுகள்தான் உள்ளது. தாவா சொத்திற்கு தெற்கில் ஏற்கனவே சீனிவாசன் என்பவரின் நஞ்சை நிலம் இருந்தது. தற்பொழுது கல்யாணி சீனிவாசபுரம் நகர் மற்றும் காமராஜ் நகர் மனைப்பிரிவுகள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கில் சுப்பிரமணியன் என்பவரின் நஞ்சை நிலமும், வீடும் உள்ளது என்றால் சரிதான். சுப்பிரமணியன் என்பவரின் நஞ்சை நிலம் 4-ம்பிரதிவாதிக்கு சொந்தமானது ஆகும்..." என்று கூறியுள்ளார்.

23. வாதி வழக்குரையின் சொத்துவிபரத்தில் பாய்ச்சல் கண்ணிக்கு கிழக்கு, வாதியின் இரண்டு ஏக்கர் நஞ்சைக்கு தெற்கு, சீனிவாசன் நஞ்சைக்கு வடக்கு, ஈசானிய காலனி தெருவிற்கு மேற்கு என்று நான்கெல்லைகள் கூறியுள்ளார். தாவா சொத்திற்கு கிழக்கில் ஈசானிய காலனி தெரு உள்ளதாக வழக்குரையில் சொத்துவிபரத்தில் கூறியுள்ள வாதி பி.வா.சா.1-யை குறுக்கு விசாரணை செய்யும்பொழுது தாவா சொத்திற்கு கிழக்கில் சுப்பிரமணியன் என்பவரின் நஞ்சை நிலமும், வீடும் உள்ளதாக கேள்வி எழுப்பியுள்ளார். வழக்குரையின் சொத்து விவரத்தில் கூறியுள்ள கிழக்குப்பகுதி நான்கெல்லைக்கும், பி.வா.சா.1-யை வாதி குறுக்கு விசாரணை செய்துள்ளதற்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. அதேபோல் வாதியை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்பொழுது சட்டநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான சுப்பிரமணியன் அனுபவத்தில் உள்ள மனைக்கு மேற்கில் தாவா சொத்து உள்ளதாக கேட்கப்பட்ட கேள்விக்கு இல்லை என்று வாதி தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். அதேபோல் வாதியின் மகளான வா.சா.2-ம் மறுத்துள்ளார். ஆனால் வாதி தரப்பில் தாவா சொத்திற்கு கிழக்கில் சுப்பிரமணியன் என்பவரின் நஞ்சை நிலமும், வீடும் உள்ளதாக பி.வா.சா.1-யை குறுக்கு விசாரணை செய்துள்ளார். அதேபோல் தாவா சொத்தின் தென்புற நான்கெல்லையாக காமராஜ் நகர், கல்யாணி சீனிவாசபுரம் நகர் மனைப்பிரிவு லே-அவுட் 40 அடி ரோடு உள்ளதாக பிரதிவாதிகள் தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்ததற்கு வாதி மறுத்துள்ளார். ஆனால் வா.சா.2 ஒப்புக்கொண்டுள்ளார். தாவா சொத்தானது வாதியின் அனுபவத்தில் 1994-ம் ஆண்டிலிருந்து இருந்து வருவதாக கூறியுள்ள வாதியால் தாவா சொத்திற்குரிய நான்கெல்லைகளை சரியாக கூறமுடியவில்லை.

24. தாவா சொத்தைப்பொறுத்து 3-ம்பிரதிவாதியின் பெயருக்கு 1,2 பிரதிவாதிகள் குத்தகை

உரிமையை மாற்றம் செய்துகொடுத்து தாவா சொத்திற்கு 3-ம்பிரதிவாதியின் பெயருக்கு குத்தகை உரிமை பதிவேடானது மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதற்கும், தாவா சொத்திற்கு 3-ம்பிரதிவாதியின் பெயரில் குத்தகை உரிமை பதிவேடு உள்ளது என்பதற்கும் பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2-யை தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்திற்கு மூன்றாம் பிரதிவாதி குத்தகை செலுத்தியதற்கு ஆதாரமாக பி.வா.சா.ஆ.3-யை தாக்கல் செய்துள்ளார். பி.வா.சா.ஆ.3 இந்த வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணம் என்பதால் அந்த ஆவணத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள தேவையில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

25. தாவா சொத்திற்கு 3-ம்பிரதிவாதியின் பெயரில் குத்தகை உரிமை பதிவேடு ஏற்பட்டுள்ள விபரம் வாதிக்கு தெரியாது என்று வாதி தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். ஆனால் தாவா சொத்திற்கு 3-ம்பிரதிவாதியின் பெயரில் குத்தகை உரிமை பதிவேடு ஏற்பட்டுள்ளதை எதிர்த்து வாதி மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்பது பி.வா.சா.ஆ.5-ன் மூலம் தெரியவருகிறது. வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணமானது தாவா சொத்திற்குரிய ஆவணம் இல்லை என்பதால் அந்த ஆவணம் வாதியின் வழக்கிற்கு எவ்வகையிலும் உதவியாக இருக்காது. தாவா சொத்தின் அனுபவத்தில் வாதி இருந்துவந்தால் தாவா சொத்திற்குரிய நான்கெல்லைகளை சரியாக கூறியிருப்பார். தாவா சொத்தின் அனுபவத்தில் வாதி இருந்து வராத காரணத்தினால்தான் தாவா சொத்தின் நான்கெல்லைகளை சரியாக கூறமுடியவில்லை. வாதிதரப்பில் சாட்சியமளித்துள்ள வா.சா.3 தாவா சொத்தில் பலமுறை விவசாய வேலைக்கு சென்றுள்ளதாக கூறியுள்ளார். வா.சா.3 தாவா சொத்தில் விவசாய வேலைக்கு சென்றிருந்தால் சுப்பிரமணியன் என்பவரும் வேலையாளாக இருந்தார் என்பதை தனது சாட்சியத்தில் கூறியிருப்பார். வா.சா.3-ன் குறுக்குவிசாரணையில் தாவா சொத்தை சுப்பிரமணியன் என்பவர் சாகுபடி செய்துவந்தார் என்று பிரதிவாதிகள் கேட்டுள்ளதற்கு சரியல்ல என்று கூறியுள்ளாரேதவிர சுப்பிரமணியன் என்பவர் வேலையாளாக இருந்து வந்தார் என்று கூறவில்லை. ஆதலால் வா.சா.3-ன் சாட்சியம் ஏற்கும்படியாக இல்லை. தாவா சொத்தின் அனுபவத்தில் வாதி இருந்து வருகிறார் என்பதை வாதி நிரூபணம் செய்ய தவறிவிட்டார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா-1 மற்றும் கூடுதல் எழுவினா-2-க்கு தீர்வு காண்கிறது.

26. <u>எழுவினா-2</u>

எழுவினா-1 மற்றும் கூடுதல் எழுவினாக்கள் 1,2-க்கு காணப்பட்டுள்ள தீர்வின் அடிப்படையிலும், வழக்கின் தன்மை கருதியும் வழக்கின் செலவுத் தொகையை தரப்பினர்கள் அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், தரப்பினர்களுக்கு வேறு பரிகாரங்கள் எதுவும்

கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா-2-க்கு தீர்வு காண்கிறது.

முடிவில் இவ்வழக்கானது செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு2018-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13-ம்நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- இ. செல்வராஜ் (13.08.2018)
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

பின் இணைப்பு

வாதி தரப்பு சாட்சிகள்

வா.சா.1 திருமதி. சபீதா ( வாதி)
வா.சா.2 திருமதி. ஷாலினி
வா.சா.3 திரு. சௌந்தரராஜன்

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்

பி.சா.1 திரு. மார்கோனி ( 3-ம்பிரதிவாதி)
பி.சா.2 திரு மோகன்

வாதி தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | - | வாதி பெயருக்கு சீர்காழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் கொடுத்த குத்தகை ரசீதுகள் ( எண்ணிக்கை - 5) |
| வா.சா.ஆ.2 | 26.05.2012 | வாதி வழக்கறிஞர் மூலம் 1முதல் 3 பிரதிவாதிகளுக்குக் கொடுத்த அறிவிப்பின் நகல். |
| வா.சா.ஆ.3 | - | வாதி கொடுத்த அறிவிப்பை 1முதல் 3 பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை. |
| வா.சா.ஆ.4 | 04.06.2012 | வாதி கொடுத்த அறிவிப்புக்கு 1முதல் 3 பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் கொடுத்த பதில் அறிவிப்பு |
| வா.சா.ஆ.5 | 11.06. 1991 | சீர்காழி வட்டாட்சியரின் V/ 36/91 எண்ணிடப்பட்ட உத்தரவு |

பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 22.2.2012 | சீர்காழி வட்டாட்சியர் மற்றும் குத்தகை உரிமை பதிவு அலுவலரின் நி.மு.கு.உ.ப.எண். 13/2012/ஆ2 எண்ணிடப்பட்ட உத்தரவு |
| பி.சா.ஆ.2 | 12.3.2012 | 3-ம்பிரதிவாதி பெயருக்கான குத்தகை உரிமைப்பதிவேட்டின் நகல் |

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.3 | 22.2.2017 | 3-ம்பிரதிவாதிக்கு சீர்காழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் கொடுத்த குத்தகை ரசீது. |
| பி.சா.ஆ.4 | 22.02.2017 | 4-ம்பிரதிவாதி தேவஸ்தானத்தின் கண்காணிப்பாளர் வழங்கிய சான்று |
| பி.சா.ஆ.5 | - | வாதி மயிலாடுதுறை குத்தகை உரிமை மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கு.உ.ப.மே.மு.எண். 2.2/013-ன் மேல்முறையீட்டின் நகல். |
| பி.சா.ஆ.6 | - | மயிலாடுதுறை வருவாய் நீதிமன்றத்தில் இருந்து 3-ம்பிரதிவாதிக்கு அனுப்பிய பொது நோட்டீஸ். |

ஒம்/- இ. செல்வராஜ் (13.08.2018)
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.